**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 130** **நாள்: 12.09.2016**

## வரைவு வாக்குச்சாவடி மையங்கள் குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசனைக்கூட்டம் !

********

பெருநகர சென்னை மாநகராட்சி, உள்ளாட்சி தேர்தல்–2016யை முன்னிட்டு, வரைவு வாக்குச்சாவடி மையங்கள் குறித்து அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் இன்று (12.09.2016) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளான பாரதிய ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய தேசிய காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் தேசிய முற்போக்கு திராவிட கழக கட்சி ஆகியவற்றை சார்ந்த கட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை தெரிவித்தனர்.

மேலும், இக்கூட்டத்தில் அரசியல் கட்சிப் பிரதிநிதிகளிடம் தங்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகளை உடனடியாக தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

**செய்தி வெளியீடு:** **துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**